| சாட்சி : PW1<br>பாஸ்கரன் | அ.வ.எண். 263/2015 | 13.06.2024 |
|---|---|---|

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பழைய புல எண்.382/3 புதிய புல எண்.16/3 இந்த சொத்தில் என்னுடைய சொத்தானது 16/3 சி மற்றும் 16/3 டி ல் மட்டுமே உள்ளது. புல எண்.16/3 ஏ மற்றும் 16/3 பி ல் எனக்கு சொத்து எதுவும் கிடையாது. வழக்கு சொத்தான 10 சென்ட் உள்ளதை காட்டுவதற்கு பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.4 ஆவணமானது பழைய புல எண்.382/4 க்கானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தவிர தாவா சொத்தின் அளவுகள் குறித்து வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள ஆவணத்தில் 901 சதுரடி உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் புல எண்.382/3 க்கானது ஆகும். பி.வா.சா.ஆ.5 ஆவணம் மொத்தம் 12 சென்ட்கானது. பி.வா.சா.ஆ.5 ஆவணமும் புல எண்.382/3 க்கு சம்மந்தப்பட்ட ஆவணமாகும். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் புல எண்.16/3 சி மற்றும் 16/3 டி ஆகியவை சேர்த்து 22 சென்ட் வருகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் 5 ஆவணங்கள் சேர்த்து மொத்தம் 14 சென்ட் உள்ளது. புல வரைபடத்தில் புல எண்.16/3 சி மற்றும் 16/3 டி சேர்த்து 25 சென்ட் உள்ளது என்றால் சரிதான். ஆரம்பத்தில் குண்டுமணியின் சொத்து புல எண்.16/3 சி ல் இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணம் புல எண்.382/3 க்கானது. எனது ஆவணங்களில் புல எண்.16/3 சி மற்றும் 16/3 டி ஆகியவை சேர்த்து 14 சென்ட் உள்ளது. ஆனால் எனக்கு வழங்கப்பட்ட பட்டாவில் 8 சென்ட் சேர்த்து உள்ளது என்றால் சரியல்ல. எனது பத்திர அளவைவிட புல வரைபடத்தில் 11 சென்ட் சேர்த்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

வருவாய் துறை ஆவணங்களில் அளவுகள் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. வருவாய் கணக்குகளின் அடிப்படையில் நான் பரிகாரம் கோருவதால் எனக்கு நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தகப்பனார் 1965 ல் அந்த இடத்தில் கட்டுமானம் அமைத்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2014 ல் பழைய ஓட்டு வீட்டை விஸ்தீரணம் செய்து கட்டினார். அப்போது நான் ஆட்சேபனை தெரிவித்தேன். சர்வேயர் வைத்து அளந்து பார்த்தேன். அவ்வாறு அளந்து பார்த்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பார்த்து தான் சொல்ல வேண்டும். நீ.ம.சா.ஆ.1, 2 மற்றும் 3 ஆவணத்தில் பிரதிவாதி கட்டிடம் புதிதாக உள்ளதை காட்டப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தாத்தா புல எண்.382/3 ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 34 சென்டையும் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு மேற்படி 34 சென்டில் 10 சென்டை மட்டும் தான் விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. புல எண்.382/3 ல் 24 சென்ட் பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வீடு அவரது இடத்தில் தான் உள்ளது என்றும், அவர் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.